முருகப்பெருமான் துணை

**மகான் கடைப்பிள்ளை சித்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**14.05.2023,**ஞாயிற்றுக்கிழமை

1. அன்னதான சேவை ஆற்றி
   அறம் மிக்க ஞான பூமியாக
   மண்ணுலகை மாற்ற வந்தநல்
   மாதவராஜனே அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
   அகிலமதில் சோபகிருது தகர் திங்கள்
   வரங்களென முப்பானோர்திகதி கதிர்வாரம்
   (சோபகிருது வருடம் சித்திரை மாதம் 31 ம் நாள், 14.05.2023, ஞாயிற்றுக்கிழமை)
   வழங்குவேன் அறிவுரை ஆசி
3. ஆசிதனை கடைப்பிள்ளைசித்தரும்
   அருளுவேன் உலகோர் நலம்பெற
   வாசிவென்ற ஞானிகள் கூட்டம்
   வரம்தந்து அரங்கன் குடிலில்
4. குடிலில் சூட்சும பலமாக
   குருவரங்கனுடன் இயங்கிவர
   தேடி பிரணவக் குடிலடைந்து
   தேசிகன் ஆசிபெறும் மக்களுக்கு
5. மக்களுக்கு மகான்கள் பலரின்
   மகத்துவமிக்க ஆசி வரம்
   தேக்கமின்றி அடைந்து நன்கு
   தேகமும் மனமும் பலம் பெறும்
6. பலமுற உயர் சேவைகளை
   பக்குவம் கூடிடச் செய்துமே
   சலனமற அரங்கன் தருகின்ற
   சன்மார்க்க நெறிக் கொள்கையை
7. கொள்கையை உலகமெல்லாம்
   குறைவிலா கொண்டு சென்று
   வல்லமைபட தொண்டாற்றுகின்ற
   வையகத்தின் அரங்கன் சீடர்கட்கு

8. சீடர்கட்கு இடர்களை வெல்லும்
சித்தியும் ஞான பலமும்
கூடியே ஞானவான்களாக
குருவரங்கன் ஆசிபட உயருவர்

9. உயருவர் உலகை மாற்றும்
உண்மை பலமிக்கவர்களாக
தயவை எங்கும் விதைத்து
தருமம் வளர்க்கின்ற மக்களாக

10. ஆகவே ஆற்றல் பெருக்கி
அகிலத்தில் ஞானவான்கள் தலைமை
வகைபட வருகின்ற வண்ணம்
வளர்ந்தோங்கி சேவை சிறந்து

11. சிறந்துமே அற்புதம் படைப்பர்
சிறப்பான பாதுகாப்புமிக்க
பரந்த ஞான உலகம் படைப்பர்
பகிர்ந்த அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–